Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 கார்த்திகை (30 - 11 - 1990) வெள்ளிக்கிழமை ஓசை 275

## யாழ். மாநகரசபை ஊழியர் முன்னுதாரணம்

(யாழ்ப்பாணம்)

தமது மாதாந்த வேதனத்திலிருந்து ஒருநாள் ஊதியத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் யாழ். மாநகரசபை ஊழியர்கள் ஒப்படைத்தனர். இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களுக்கு உதவுவதற்காக இவ்வாறு திரட்டப்படும் நிதியினை பயன்படுத்த தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தீர்மானித் (4ஆம் பக்கம் பார்க்க)

அரச செய்தி நிறுவனங்கள்

# அரசாங்கத்துடன் இணைந்து மக்களை ஏமாற்றுகின்றன!

## பாராளுமன்றத்தில் சிறிமாவோ குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாங்குளம் இராணுவ முகாம் தாக்கப்பட்டதும், நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் போரில் வெற்றி எவ்வளவு தொலைவில் உள்ளது என்பதை கோடிட்டுக் காட்டுகின்ற அதேவேளை எல்லாம் நல்லபடியாக நடக்கின்றது. புலிகள் வீழ்ச்சி அடையும் நிலையில் இருக்கின்றார்கள் என மக்களைநம்ப வைப்பதற்கு அரசிற்கு சொந்தமான செய்தி நிறுவனங்கள் போலிப்பிரசாரங்களில் ஈடுபட்டுவருவதாக நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தைக் குற்றம்சாட்டினார்.

மேலும் அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடக்கும் போரை அரசு கையாளும் முறை குறித்து பாராளுமன்றத்தில் கண்டனம் தெரிவித்தார். இலங்கை இராணுவத்தின் உயிர்ச் சேதம் பற்றிக் குறிப்பிட்ட திருமதி பண்டாரநாயக்கா நிலைமை எவ்வளவு மோசமானது என்பதை அரசாங்கம் உணரத் தவறிவிட்டது எனச் சாடினார். மாங்குளம் முகாம் தாக்கப்பட்டதும், நூற்றுக் (4ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் குண்டு வீச்சிற்கு இருவர் பலி; பலர் காயம்

### லொறிகள், வீடுகள் பலத்த சேதம்

(பூநகரி)

நேற்றுப் பிற்பகல் மூன்று மணியளவில் பூநகரிப்பகுதியை வட்டமிட்ட மூன்று பொம்மர் விமானங்கள்ஒரு அவ்ரோவிமானமும் திடீரென வாடியடி, தென்னந்தோட்டம், ஆலடிப் பகுதிகளில் குண்டுவீச்சை நடாத்தின. ஒன்பதுக்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன. இந்தக்குண்டுவீச்சின் போது லொறிச்சாரதி ஒருவரும், இன்னொருவரும் கொல் (4ஆம் பக்கம் பார்க்க)

ஊர்காவற்றுறையில் வெளியேற முற்பட்ட

## இராணுவம் - புலிகள் மோதல் மூன்று புலிகள் வீர மரணம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை இராணுவ முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டதில் இராணுவத்தினர் பெரும் இழப்புக்களுடன் பின்வாங்கினர். புலிகள் தரப்பில் மூன்றுபோராளிகள் வீரமரணமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் ஊர்காவற்றுறை இராணுவ முகாமில் இருந்துரோந்து செல்ல முயற்சித்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். நீண்டநேரம் நடைபெற்ற மோதலின் பின் இராணுவத்தினர் பெரும் இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்றனர். (4ஆம் பக்கம் பார்க்க)

## சுயநிர்ணய கோரிக்கைக்கு ஐரோப்பிய சமூக ஆதரவு

(ஜெனிவா)

ஈழத்தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கை சர்வதேச அங்கீகாரம் பெறவேண்டும் என்ற கோஷத்துக்கு ஐரோப்பிய சமூகத்தின்ஆதரவு கிடைத்துள்ளது.

சிறுபான்மையினர்பாதுகாப்புத் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 42ஆவது அமர்வு சமீபத்தில் ஜெனிவா நகரில் இடம்பெற்றது. அந்த அமர்வில் 17 அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் ஈழத்தமிழரின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

## இடிபாட்டிற்குள் 2500 ரவைகள்

(பூநகரி)

புலிகளால் தகர்க்கப்பட்ட பூநகரி கோட்டை இராணுவ முகாம் இடிபாடுகளை அகற்றிக்கொண்டிருந்தபோது 2500 ரேட்டோ ரவைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

1987ஆம் ஆண்டு ஜூலை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரிக் கோட்டை (4 ஆம் பக்கம் பார்க்க)

## களஞ்சியத்தில் இட நெருக்கடி பொருள்கள் இறக்கத் தாமதம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்குதுறையை அண்டியிருக்கும் களஞ்சியங்களில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் தொடர்ந்து வரும் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கமுடியாதநிலையும், காலதாமதம் ஏற்படவேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது.

இந்த இறங்கு துறைக்கு நேற்று இரவு 'குமண' என்ற கப்பல் வருவதாக எதிர்பார்க்கப்பட்டிருந்தது அதேவேளை ஏற்கனவேஅங்கு தங்கிநிற்கும் 'லிங்கேரேடஸ்'லிருந்து பொருள்களை இறக்கமுடியாத (4ஆம் பக்கம் பார்க்க)

## கட்டாக்காலி நாய்களை ஒழிக்க நடவடிக்கை

(நமது நிருபர்)

கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதால் அடையாளமற்ற கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பதற்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுதொடர்பான மக்கள் முன்னணிமாவட்டச்செயலகம் விடுத்த அறிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து அவை மக்களைக் கடிப்பதால் இதுவரை பலபொதுமக்கள் மரணமடைந்துள்ளதுடன் தகுந்த மருந்துவகை இல்லாமல் அல்லல்படுகின்றார்கள். இந்த நிலையில் கட்டாக்காலி நாய் (4 ஆம் பக்கம் பார்க்க)

கீரிமலை கிருஷ்ணர் கோயில் பகுதியில்

## புலிகள்-இராணுவம் மோதல் இழப்புகளுடன் படைதிரும்பியது

(தெல்லிப்பளை)

கீரிமலைகிருஷ்ணர் கோயில் பகுதியிலிருந்து மேற்கு பக்கமாக வெளியேற முற்பட்ட இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் கடுந் தாக்குதலை அடுத்து இழப்புகளுடன் முகாம் திரும்பினர்.

நேற்றுக் காலை ஆறு மணி (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலைக்கு மேலதிகமாக 10 லட்சம் மட்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனைக்கு இந்த ஆண்டு மேலதிகமாக பத்து இலட்சம் ரூபாவை மட்டுமே சுகாதார அமைச்சு ஒதுக்கியிருக்கிறது.

சிறிலங்கா முப்படைகளின் தாக்குதலினால் பலத்தசேதத்திற்கு உள்ளான இவ் வைத்தியசாலையின் திருத்த வேலைகளுக்கு மேலதிக பண ஒதுக்கீடு செய்யும்படி வைத்தியசாலை நிர்வாகம் அமைச்சிடம் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்தே இந்த நிதி வழங்கப்பட்டிருக்கிறது. இப் பணத்தைக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பளையில் விமானக் குண்டுவீச்சு ஒருவர் பலி, கடைகள், வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் மூன்று நேற்று மாலை பளை நகர்ப் பகுதிக்குள் குண்டுவீசித் தாக்கியதில் ஒருவர் பலியானார்; மூவர் காயமடைந்தனர். பத்துக்கும் அதிகமான கடை கட்டடங்கள் பலத்த சேதமுற்றன.

மாலை மூன்றுமுப்பது மணியளவில் பளை நகர்ப் பகுதியின் மேலாக வட்டமிட்ட விமானங்கள் மாறிமாறி இந்த நாச வேலையில் ஈடுபட்டன. விமானங்கள் நகருக்குள் பிரவேசித்ததும் மக்கள் சிதறி ஓடினர். இருந்த போதிலும் கடை ஒன்றின் முன் நின்ற ஒரு நபர் ஸ்தலத்திலேயே பலியாயினார். மேலும் மூவர் காயமடைந்தனர். இரட்னம் ஸ்ரோஸ் என்ற கடையின்மீது வீசப்பட்ட குண்டு வெடித்ததில் எஸ். பிரகலாதன் என்ற 24 வயது இளைஞர் காயமடைந்தார். இவர் பளையி (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆமைபிடிக்க முற்பட்ட சிறுவன் கிணற்றில் வீழ்ந்து மரணம்

(மல்லாகம்)

கிணற்றில் ஆமைபிடிக்க முற்பட்ட சிறுவன் ஒருவன் கிணற்றில் வீழ்ந்து மரணமானார்.

நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்ற அகதி முகாமில் தங்கியிருந்த கட்டுவனைச்சேர்ந்த சி. கெங்காதரன் (வயது7) என்ற சிறுவன்வயலில் இருந்த கிணற்றில் ஆமைபிடிக்க முற்பட்டபோது தவறிவீழ்ந்ததில் மரணமானார். (ச

## வரிவிளம்பரம்

**நியூ வீனஸ்**
**NEW VENUS**

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்! எமது ஸ்தாபனம் மீண்டும் 60, ஸ்ரான்லி வீதியில் நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் கடிகாரங்களும், பற்றறிகளும் விற்பனைக்குண்டு. இளை ஸ்தாபனம்: 153A, பலாலி வீதியிலும் நடைபெறுகின்றது.

(B/1586)

---

பெண் ரைப்பிஸ்ட்
தேவை

யாழ். மின்சாரநிலைய வீதியில் இயங்கும் கிளீன் கட் ஸ்தாபனத்திற்கு ஆங்கில ரைப்பிஸ்ட், தமிழ் ரைப்பிஸ்ட்கள் தேவை. அனுபவமுள்ளவர்கள் மட்டும் தங்கள் விண்ணப்பங்களை 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண்றோட், (நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கும் இந்து மகளிர் கல்லூரிச் சந்திக்கும் இடையில்) நேரடியாக டிசம்பர் 12 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

(B/ 1631)

---

**A/L இரசாயனம்**

108 Brown Road A/L 92 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் 1-12-90 சனி 6.30 a m பிரிவு II ஆரம்பம் 4-12-90 செவ்வாய் 4-45 p. m முதல் வகுப்பில் நேர அட்டவணை தரப்படும். A/L 91 பௌதிக இரசாயனம் ஆரம்பம் 1-12-90 சனி 2-45 p. m (R/ 880)

---

## முதலுதவிப் பெட்டி, கைநூல் விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் செஞ்சிலுவைச் சங்கத்தினால் முதலுதவிப் பெட்டி, முதலுதவி சம்பந்தமான கைநூல் என்பன விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

முதலுதவிப் பெட்டியில் அவசர சிகிச்சைக்குரிய சில மருந்துப் பொருள்களும் சில மருத்துவ உபகரணங்களும் அடங்கியிருந்தன. இப்பெட்டி ஒன்றின் விலை 300 ரூபா, கைநூல் ஒன்றின் விலை 50 ரூபாவாகும். (க)

## பதிவுத் தபால்கள் ஏற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையத்தில் நேற்று முன்தினம் முதல் பதிவுத் தபால்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

நண்பகல் 12 மணிவரையும் தபாலகத்தில் உள்ளக வேலைகளும் தபால்களைப் பதிவு செய்தலும் இடம் பெற்றது.

(க)

## கடையில் திருட்டு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு பகுதியில் கடையொன்று நள்ளிரவில் உடைத்துத் திருடப்பட்டது. மேற்படி கடையிலிருந்து உணவுப் பொருள்கள் உட்பட பல பெறுமதியான பொருள்களும், பெற்றோல் மாக்ஸ்வினக்கும் திருடப்பட்ட பொருள்களில் அடங்கும். கோட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த திரு கனகரத்தினம் என்பவருக்குச் சொந்தமான கடையிலேயே சில நாட்களுக்கு முன்னர் இச்சம்பவம் இடம்பெற்று இருக்கிறது. (ச2)

---

## பெட்டியுடன் புறப்படுவாய்

காங்கேயன் கரையினிலே
கஷ்டப்படும் சிப்பாயே
பாங்கான வாழ்வுதனை
பாழாக்க முனைவதேனோ?

கண்ணான ஈழந்தனை
கடைசிப்புலி இருக்குமட்டும்
மீட்காமல் ஓயமாட்டார்
என்பதுதான் புரியாதோ?

கொண்டைச்சி, கொக்காவில்
கோட்டை, மாங்குளம்........
பக்குவமாய் புலிகள் தரமுன்
பெட்டியுடன் புறப்படுவாய்

— பைப்

---

## மொழி பெயர்ப்பாளர்கள் தேவை

ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பதில் அனுபவமுள்ள மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. தமிழில் சுயமான படைப்பாற்றல் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு விளம்பர இல. **101**,
மே - பா ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(B/1643)

---

பேக்கரி வேலையில் அனுபவம் உள்ளவர்

## தேவை

அமைய அடிப்படையில் கடமையாற்றுவதற்கு பேக்கரி வேலையில் அதாவது பாண், பிஸ்கற், பணிஸ் தயாரிப்பதில் அனுபவமுடையவர்கள் உரிய சான்றிதழ்களுடன் 05-12-90 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பின்வரும் முகவரியில் சமுகமளிக்கவும்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,

கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (B- 1639)

---

## A/L 90, 91

வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பம்
02 12-1990 காலை 9-00 மணி

## A/L 92

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

(எமது வழமையான சிறப்பான ஆசிரியர் குழுவினால்)

## New Master Institute

B.M.C, லேன், யாழ்ப்பாணம்.
(B. 1633)

---

## கண்ணீர் அஞ்சலி

கூட்டுறவுத் தந்தை அமரர் உயர் திரு
**சண்முகம் ஞானப்பிரகாசம்**
அவர்கள்

கூட்டுறவுச் சங்கங்களின் வழிகாட்டியாகவும், சிக்கன சேமிப்பு கடனுதவு சங்கத்தின் சிறந்த சேவையாளராகவும் திகழ்ந்தவர். அவரது திடீர் மரணம் கேட்டு வருத்தமுற்றோம். சிறந்த கூட்டுறவாளரை நாம் இழந்து விட்டோம். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரது குடும்பத்தினர், உற்றார், உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

291, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
27.11.1990

பணிப்பாளர், பணியாளர்
யாழ். ப., நோ.கூ. சங்கம்
(B-1638)

---

## மீண்டும் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன


30 - 11 - 90 நேரம்: 9-12

*Unikco Computer Centre*

No. 37 (351) Clock Tower Road,
JAFFNA.
(B/1636)

---

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
06-02-1976

தாயக மடியில்
19-10-1990

நீர்வேலி

**சற்குரு - சதீஸ்**
**(சீனன்)**

(பலாலி இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்தவர்)

சதீஸ்! நீ வயதிலே குறைந்தவன்
சதீஸ்! நீ உள்ளத்தில் உயர்ந்தவன்
சதீஸ்! நீ உருவத்தில் சிறியவன்
சதீஸ்! நீ செய்கையில் பெரியவன்
சதீஸ்! நீ ஈழமண் மீட்கச் சென்றாய்
சதீஸ்! நீ உயிரையும் மீட்டேவிட்டாய்
சதீஸ்! நீ கண்ட கனவெல்லாம் நனவேயாகும்
சதீஸ்! நீ சாந்திபெற்றிடுவாயன்றோ! சாந்தி!

உன்பிரிவால் வாடும் தந்தை, தாய்,
சகோதரர், மாமன் மாமியர், அம்மப்பா,
அம்மம்மா, சித்தப்பாமார், சிற்றன்னைமார்.
டாக்டர் ஆழ்வாப்பிள்ளை தம்பதியர் சுற்றத்தார்.
அயலவர்.

சீனன்வீதி
நீர்வேலிவடக்கு
நீர்வேலி.

(R 872)

---

## முதலாம் வருட நினைவஞ்சலி

அன்னை மடியில
09 — 02 — 1983



இறைவன் அடியில்
30 — 11 — 1989

## செல்வி ஜெயமாலினி பாலதாஸ்

நினைத்தது இருளாகி; நடந்தது கனவாகி;
வளர்ந்தது மரமாகி; பார்த்தது பறவைபோல்
பறித்து விட்டான் காலனவன்!

காலையில் உன்வரவை சிநேகிதிகள்
பார்த்திருப்பர்; மாலையில் உன்வரவை
பெற்றோர்; சகோதரர் எதிர்பார்ப்பர்!

மணவறையில் உன்னழகைப் பார்த்திருக்கும்
நேரத்திலே மாலினி அம்மா நீ
எங்கேதான் சென்றனையோ?

உன் பிரிவால் துயரடையும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார்,
அன்ரிமார், பெரியப்பா, பெரியம்மா,
மாமன்மார், உற்றார், உறவினர்கள்.

6, சென்பற்றிக்ஸ் வீதி,
றெக்கிள மேஷன், குருநகர்,
யாழ்ப்பாணம். (B/1634)

## சிந்தனைக்கு

மெல்லத் தெரிந்து சொல் -

- புதிய ஆத்திசூடி

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்:025-2839 நிர்வாகபீடம்:2208
த.பெ.எண் 05

# அதிகாரப் போட்டியின் துரும்புச் சீட்டாக...

தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதத் தொழிற்சாலை உள்ளது; பயிற்சி முகாம் உள்ளது; என்பனவற்றோடு பெரியளவு எண்ணிக்கையில் விடுதலைப் புலிகள் ஊடுருவி உள்ளார்கள் என்பன போன்ற தமிழக எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளும், தமிழக அகதி முகாம்களில் போராளிகளைத் தேடி தமிழக பொலிஸார் சோதனை போன்ற விடயங்களும் தமிழக அரசியல் வாதிகளின் அதிகாரப் போட்டியின் விளைவாக ஏற்பட்டு உள்ள அர்த்தமற்ற, தேவையற்ற விடயங்கள் ஆகும்.

இலங்கையில், தமிழ்ப் பிரதேசங்களில் இன்றுள்ள நிலைமையை உணர்ந்த அல்லது காண்கின்ற எவரும் இக்குற்றச்சாட்டுக்களில் உண்மை இருக்க முடியாது என்பதை உணர்ந்து கொள்ள முடியும். இன்று இலங்கையின் வடபகுதி முழுவதும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்கு தமக்குத் தேவையான பயிற்சி முகாம்களையோ தொழிற்சாலைகளையோ அமைக்காமல், கடந்த சில வருடங்களாக தமக்கு எதிராகச் செயற்படும் இந்திய மண்ணில் ஏன் அவற்றை விடுதலைப் புலிகள் அமைக்க வேண்டும்?

இந்திய அரசியல்வாதிகளும், தமிழக அரசியல் வாதிகளும் எப்பொழுதும் இலங்கைத்தமிழர் விடயத்தை தமது அரசியல் இலாபத்திற்காகப் பயன் படுத்தினரே தவிர இலங்கைத் தமிழருக்கு (மனப்பூர்வமாக) உதவ முன்வர வில்லை. எதிர்கட்சிகளாக இருக்கும் போது இலங்கைத் தமிழர் விவகாரத்தை அரசாங்கத்திற்கு எதிராகப் பயன் படுத்தும் கட்சிகள் அரசாங்கக் கட்சிகளாக மாறியவுடன் அதனை மறந்துவிடுவதுடன் சில வேளைகளில் எதிராகவும் செயற்படுகின்றனர்.

# 26

# உதிக்கும் திசை நோக்கி

விசுவுடன்போய்க் கொண்டிருக்கையில் திரும்பிப்பார்த்தேன்: ஒரேவெளி முன்னாலும் வெளி. கிட்டத்தட்ட முப்பது நிமிடங்கள் ஒரே வெளிக்குள்ளாலேயே சென்று கொண்டிருந்தோம். அப்போது நான் புதுவையண்ணா யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு வல்லை வெளியைப் பார்த்துவிட்டு ''வல்லை வெளி தாண்டிப் போகுமோ'? என்றுபாடினார். இந்த வெளியைப் பார்த்தால் தான் உண்மையான வெளி எதுஎன்பது தெரியும் என்றேன். அப்போது யோகன் ''அது வல்லை வெளி. இது வானவெளி'' என்றார். யாழ்ப்பாணத்திலிருந்துமட்டக்களப்புக்குச் சென்று கொஞ்சக் காலம் போராடி விட்டுத் திரும்பிய ஒரு போராளியிடம் மட்டக்களப்பைப் பற்றிக் கூறச்சொன்னபோது ''மட்டக்களப்பில் ஓடினால் வெளி, விழுந்தால் வெடி'' என்று கூறியதுஞாபகத்துக்குவந்தது. 1987ஆம் ஆண்டுவரை சயனைட் மூலம் வீரமரணமடைந்த போராளிகளின் தொகை மட்டக்களப்பில் தான் கூடுதலாக இருந்தது. ஏனெனில் அங்குள்ள இயற்கையமைப்பு பெரும்பாலும் வெளிகள் உள்ள பிரதேசமாக இருப்பதால் போராளிகளுக்

தான் உங்களது வேலை: விடுதலை சம்பந்தமான விஷயம் எங்களால் எதுவும் செய்ய முடியாது: என்று கூறினார்கள்' என்றார். எவ்வளவு அலட்சியமான பதில். தமது பொறுப்பில் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டால் எதுவுமே செய்ய முடியாத நிலையில் தான் இவர்கள் உள்ளனர். இப்படிக் கைது செய்யப்பட்டவர்களை யாராவது போய்ப் பார்க்க முடியுமா? என்று கேட்டேன் இதுவரை கைது செய்யப்பட்ட எவரையுமே பார்க்க முடியவில்லை என்றார்.

3மாதம். இவ்வளவு நாட்களும் எங்கேயிருந்தீர்கள்? சித்தாண்டிக் கோயிலில் அகதி முகாமில். அங்கே சாப்பாடு, வசதிகள் எப்படி? 3மாத காலத்துக்கு 13கிலோ மாவும், 6கிலோ அரிசியும் எமது குடும்பத்துக்கு தந்துள்ளார்கள். வேறெதுவும் கிடைக்கவில்லை. கொண்டு வந்த பொருள்களை யெல்லாம் விற்று உடுத்த உடுப்புடன் இருக்கிறோம். தற்போது வீரமுனை நிலைமை என்ன மாதிரி? கிராமத்தில் ஒருவருமே இல்லை: அங்கு முஸ்லிம் அதிகாரம்தான் இருக்கிறது.

> தம்பீ! இவள் என்டமகள். இவள் நல்லாப் படிப்பாள் எவ்வளவோ கஷ்டப்பட்டு இவளைப் படிப்பிச்சன். இப்ப போராட ஆக்கள்வேணும். அதால உங்களிட்ட இவளை ஒப்படைக்கிறன்.

அப்படியே பெருமாவெளிக் கட்டு என்னும் இடத்தை அடைந்தோம்: அங்கே நான்கு சின்னத்தடி நட்டு இரண்டு பனைவடலி ஓலையால் வேயப் பட்டிருந்த ஒரு குடிசையைக் கண்டேன். விளையாட்டுக்காக சிறுபிள்ளைகள் அமைக்கும் கொட்டில்தான் அது. அதற்குள் ஒருதாய் இரு குழந்தைகளை அணைத்தபடி இருந்தாள். இப்படியான நிலைமையில் இருக்கிறார்

அதனால் இராணுவம் தமிழர்கள் மீது வெறியாட்டம் ஆடுகிறது. அந்தப் பகுதியில் எத்தனைபேர் உயிரிழந்திருப்பார்கள்? முந்நூறு 'பேருக்குமேல் பெண்கள் குழந்தைகளைக் கூடவெட்டிக் கிணற்றில் போட்டிருக்கிறார்கள்.

உடற்கட்டுள்ள ஆண்கள், கல்வியறிவு மிக்கவர்கள். எல்லோரையும் தெரிந்தெடுத்துக் கொல்கிறார்கள். இங்கே நிலைமை என்ன மாதிரி? சாப்பாடு இல்லை. மருந்துஇல்லை நோயினால்குழந்தைகள் அவஸ்தைப்படுகிறார்கள். இப்போது வீரமுனை நிலைமை பற்றி அறிந்தீர்களா? கட்டடத்தை உடைத்து ஜன்னல், கதவு போன்றவற்றை முஸ்லிம் ஊர்காவல் படையினர் கொண்டு போகிறார்கள் என்றார்

# உன்னத பயணம்....

குச்சாதகமாகஅமையவில்லை. யாழ்ப்பாணத்தில் நாலுமதில் தாண்டினால் ஒரு போராளியைப்பிடிக்க முடியாது. அங்குள்ள நிலைமை அப்படியல்ல; இதனாலேயே சயனைட் அருந்த வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டன.

இலுக்குவட்டை, தீலிவட்டை

களே என்று எண்ணிய நான் அந்தத் தாயை அணுகி 'இது தான் உங்கட வீடா' என்று கேட்டேன். இல்லை. நாங்கள் அந்த மரத்தடியில தான் கிடக்கிறம். இது வேற ஆக்

புலிகள் அமைக்க வேண்டும்?

இந்திய அரசியல்வாதிகளும், தமிழக அரசியல் வாதிகளும் எப்பொழுதும் இலங்கைத்தமிழர் விடயத்தை தமது அரசியல் இலாபத்திற்காகப் பயன் படுத்தினரே தவிர இலங்கைத் தமிழருக்கு (மனப்பூர்வமாக) உதவ முன்வரவில்லை. எதிர்கட்சிகளாக இருக்கும் போது இலங்கைத் தமிழர் விவகாரத்தை அரசாங்கத்திற்கு எதிராகப் பயன் படுத்தும் கட்சிகள் அரசாங்கக் கட்சிகளாக மாறியவுடன் அதனை மறந்துவிடுவதுடன் சில வேளைகளில் எதிராகவும் செயற்படுகின்றன;

இன்றுள்ள நிலையும் அதுவே இலங்கைத் தமிழர் விவகாரத்தில் வி. பி. சிங் அரசாங்கம் இருந்தபோது விடுதலைப் புலிகளே இலங்கைத் தமிழர்களின் பாதுகாவலர்களாக இருப்பதினால் அவர்களை கட்சிகளுக்கு இடையிலான கருத்து முரண்பாடுகளை மறந்து ஆதரிக்க வேண்டும் என்று பேசி வந்த இந்திரா காங்கிரஸ் கட்சி தமிழ் நாட்டுக் கிளைத்தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும், அ. இ. அ தி மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவும் இன்று தமிழகத்தில் நடைபெறும் தி. மு. க. ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு இலங்கைத் தமிழர் விவகாரத்தை துரும்புச் சீட்டாகப் பயன்படுத்த முற்படுகின்றார்கள். இதன் விளைவாகவே தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது. ஆயுதக் கலாசாரம் பரவு இன்றது. ஆயுதத் தொழிற்சாலை, தமிழகத்தில் புலிகளின் ஊடுருவல் போன்ற குற்றச்சாட்டுகளும், குற்றச்சாட்டுகளில் ஆதாரம் இல்லை என்பதை நிருபிக்க முற்படுவது போன்ற தமிழகப் பொலிஸாரின் அகதி முகாம் தேடுதல்களும் ஆகும்.

ஆனால் இவர்களின் இந்த அதிகாரப் போட்டியின் விளைவாக ஏற்படும் ஆதாரமற்ற குற்றச் சாட்டுகள் இலங்கைத்தமிழரினதும் இந்தியாவினதும் பொது எதிரியான (இந்தியா எதிரியாக ஏற்கா விட்டால் அது இந்தியாவின் தவறே ஒழிய நமதல்ல) சிறிலங்காவிற்கு பெரியதொரு வாய்ப்பான விடயமாகும். தமிழக அரசு மீதான இக் குற்றச் சாட்டுகள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு சும்மா மென்ற வாய்க்கு அவல் கிடைத்தது போன்றதாகும்.

இதனைச் சிறிலங்கா அரசாங்கமும் சரியாகப் பயன் படுத்தி வருகின்றது. தமிழக எதிர்க்கட்சிகளின் குற்றச் சாட்டுகளை ஆதாரமாக வைத்து சிறிலங்கா அரசாங்கமும் குற்றச் சாட்டுக்களை வைப்பதோடுதனதுசெயற்பாடுகளுக்கு நியாயமும் கற்பிக்கின்றது; இதன் காரணமாக இலங்கைத் தமிழரின் நலன்கள் மட்டுமல்ல, இந்தியாவின் நலனுமே பாதிக்கப்படுகின்றது;

தமிழர் மத்தியில் உள்ள உட்பகையே கடந்த கால தமிழர் வரலாறாக இருந்துள்ளது. தமிழக தமிழர் வரலாறு பொது எதிரிக்கு எதிராக மோதிக் கொண்டதை விட தமக்குள் மோதிக் கொண்டதே அதிகமாகும்; வரலாற்றில் இவர்கள் பெருமையாகப் பேசிக் கொள்ளும் சேர, சோழ, பாண்டியர் வரலாறுகள் காலம் தவறாது தமக்குள் அவர்கள் மோதிக் கொண்டதையே எமக்குக் காட்டுகின்றன. அல்லது பலமான நிலையில் உள்ள தமது இனத்தவரை எதிரிக்குக் காட்டிக் கொடுப்பதாகவே இருந்தது. இதன் காரணமாகவே வரலாற்று ரீதியாக பெரும் நாகரிகத்தையும் செழிப்பையும் கலை கலாசார பாரம்பரியங்களையும் கொண்டிருந்த தமிழரினால் தமக்கென ஒருநாட்டை நிறுவமுடியாது உலகம் முழுவதும் சிதறுண்டு வாழ வேண்டிவந்தது.


இலங்கைத் தமிழரின் போராட்டம் தமிழருக்கென்றொரு நாடு இல்லாத பிரச்சினையை முடிவிற்குக் கொண்டு வரும். இதற்கு இடைஞ்சலாக தமது அதிகார நலனுக்காக போலியான குற்றச்சாட்டுகளையும் தேவையற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்வது இலங்கைத்தமிழருக்கு மட்டுமல்ல, உலகத் தமிழ் இனத்துக்கே தமிழக அரசியல்வாதிகள் செய்யும் துரோகமாக அமையும்.

---

குச்சாதகமாகஅமையவில்லை. யாழ்ப்பாணத்தில் நாலுமதில் தாண்டினால் ஒரு போராளியைப்பிடிக்க முடியாது. அங்குள்ள நிலைமை அப்படியல்ல; இதனாலேயே சயனைட் அருந்த வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டன.

இலுக்குவட்டை, தீலிவட்டை என்னும் இடங்களையெல்லாம் சுற்றிப்பார்த்தோம். இங்குள்ள அகதிகள்பெரும்பாலும் கிழான் சந்திவெளிப்பக்கம் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள். சட்டக் கண்டன் மூன்மாரி என்னும் இடத்தில் பொம்மர் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர்இறந்தும்இருவர் படுகாயமடைந்துமிருந்தனர். பெரியதம்பி சண்முகம் என்பது குடும்பத் தலைவரின் பெயர்.

இலுப்பையடி மூன்மாரி என்னுமிடத்தை பார்த்தோம் அங்கும் இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டவர்களின் உறவினர்கள் தங்கியிருந்தனர். முறக்கொட்டாஞ்சேனை முகாமுக்கு முன்னால் கைது செய்யப்பட்ட 35 வயதான ஒரு குழந்தைக்குத் தகப்பனான தம்பிப்பிள்ளை கந்தசாமியின் மனைவி, சித்தாண்டிக் கோயில் முகாமில் கைது செய்யப்பட்ட துரைசிங்கம் என்பவரின் தாய் என்பவர்களைச் சந்தித்தோம். "முறக்கொட்டாஞ்சேனை முகாமில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டவர்கள்?" என்று கேட்டேன். "முதல் தரம் 6, அடுத்ததரம் 15, அடுத்த தரம் 36, அந்த முப்பத்தாறு பேரில் தான் தனது மகனும் ஒருவர்" என்று சொன்னார் தாய். "தலையாட்டி மூலமாகவா கைது செய்யப்பட்டனர்?" என்று கேட்டேன்; "இல்லை ஒரு சைஸான ஆட்களைப் பார்த்து ஏற்றினார்கள்" என்று சொன்னார்கள். நற்குணம், உதயகுமார் ஆகிய இருபிள்ளைகளை சித்தாண்டிக்கோயில் அகதி முகாமில் பறி கொடுத்த தாயையும் சந்தித்தோம். புஷ்பராணி என்பது அவரது பெயர் "இவர்கள் கைது செய்யப்பட்ட போது முகாமுக்கு யார் பொறுப்பாக இருந்தார்கள்?" என்று கேட்டேன். "செஞ்சிலுவைச்சங்கம் தான்" என்றார்கள். இப்போது அவர்கள் உங்கள் பிள்ளைகளின் விடுதலை சம்பந்தமாக என்ன சொல்கிறார்கள்? என்று கேட்டேன். எழுதித்தருவதுமட்டும்



இரு பனை வடலியோலையால் வேயப்பட்ட இரவல் குடிசைக்குள் ஒதுங்கும் ஒரு குடும்பம்

– இடம் பெருமாவெளிக்கட்டு

களே என்று எண்ணிய நான் அந்தத் தாயை அணுகி 'இது தான் உங்கட வீடா' என்று கேட்டேன். இல்லை. நாங்கள் அந்த மரத்தடியில தான் கிடக்கிறம். இது வேற ஆக்கள் இருக்கிறது. நாங்கள் வெயிலுக்காக வந்திருக்கிறம் என்றார் அவர். நான் நினைப்பதைவிட மோசமான நிலை.

அங்கிருந்த இன்னொருவரைச்சந்தித்தேன். அவருடன் உரையாடினேன்: உங்கள் பெயர் என்ன? காளிக்குட்டி ஆறுமுகம். எந்த இடம்? வீரமுனை. வீரமுனையைவிட்டு ஏன் இங்கு வந்தீர்கள்? வீரமுனையில் 300பேரை இராணுவமும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் கைதுசெய்து கொண்டு போனார்கள். வெட்டிக்கொல்கிறார்கள், அதனால் தான் இங்கு வந்திருக்கிறோம். வீரமுனையில் எங்கு வைத்து கைது செய்யப்பட்டார்கள்? அங்குள்ள சிந்தாத்துரைப் பிள்ளையார் கோயிலில். இதில் உங்களது உறவினர்களும் இருக்கிறார்களா? எனது தம்பிமார் மூவர் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். அவர்களது பெயர், வயது? உலகநாதன் 30வயது. யோகராசா 28வயது, நவரட்ணம் 26வயது. இவர்கள் திருமணமானவர்களா? உலகநாதன் மட்டும் திருமணமானவர். இவருக்கு ஒரு பெண் குழந்தையும் இரண்டு ஆண்குழந்தைகளும் உண்டு. நீங்கள் மட்டக்களப்புக்கு வந்து எவ்வளவு காலம்?

வீரமுனை நிலைமை பற்றி அறிந்தீர்களா? கட்டடத்தை உடைத்து ஜன்னல், கதவு போன்றவற்றை முஸ்லிம் ஊர்காவல் படையினர் கொண்டு போகிறார்கள் என்றார் அவர். அவரிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினோம். கரிகாலனின் அலுவலகம் சென்றோம்; அங்கு ஒரு தகப்பன் தமது மகளுடன் வந்திருந்தார். "தம்பி! இது என்ட மகள். இவள் நல்லாப்படிப்பாள்; எவ்வளவோ கஷ்டப்பட்டு இவளைப் படிப்பிச்சன், ஆனா இப்பபோராட ஆக்கள் வேணும். அதால இவளை உங்களிட்டஒப்படைக்கிறேன்; போராட்டம் முடியிறபோது இவள் உயிரோட இருந்தால் இவளைப் படிப்பிச்சுப் போடோணும்" என்றார். பொதுவாகவே தகப்பன்மார் பெண் பிள்ளைகளில்தான் கூடிய பாசம் வைத்திருப்பார்கள். பெண்பிள்ளையையே இப்படி ஒப்படைக்க ஒரு தகப்பன்முன் வருகிறார் என்றால்... இது தான்மட்டக்களப்புமண்ணின் மகிமை. படிப்பைக் காரணம் காட்டி பிள்ளைகளைப் பிரித்தெடுக்கும் எமதுசமூக அமைப்புடன் ஒப்பிடுவதே தவறு.

(தொடரும்)

வன்னிப் பிராந்தியத்தில்

# மாவீரர்தின நிகழ்ச்சிகளில் பிரதித்தலைவர் மகேந்திரராசா

(வன்னி)

வன்னிப் பிராந்தியத்தில் இடம்பெற்ற மாவீரர்வார நிகழ்ச்சிகளில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராசா கலந்துகொண்டார். இருபத்தாறாம் திகதி அதிகாலை மணலாறு மாவட்டம் அளம்பிலில் மாவீரரின் பெற்றோரைச் சந்தித்த திரு. மகேந்திரராசா அவர்கள் ஒட்டுசுட்டான், உருத்திரபுரம் ஆகிய இடங்களில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டார்.

மன்னார் மாவட்டம் முழங்காவிலில் இருபத்தியேழாம் திகதி அதிகாலை 12.03 க்கு மாவீரர் சுடரை திரு. மகேந்திரராசா அவர்கள் ஏற்றி வைத்தார். அதற்கு முன்பாக விடுதலைப் புலிகளின் அணி வகுப்பு இடம்பெற்றது. பாடசாலைமாணவர்களும், பொது மக்கள் பலரும் விடுதலைப் புலிகளின் அணிவகுப்பைக் கண்டு மகிழ்ச்சியடைந்ததுடன் திரு: மகேந்திரராசா அவர்களுக்கு பெருவரவேற்பும் அளித்தனர். பூநகரி - மன்னார் வீதியில் முழங்காவிலில் மாவீரர் கலையரங்கத்தையும் திரு. மகேந்திரராசா அவர்கள் திறந்துவைத்தார்.

# 'சிகிரியா'வில் செயற்கைக்கால் கொண்டுவர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கி புறப்படவிருக்கும் சிகிரியா என்ற கப்பலில் செயற்கைக் கால்களும் எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்தும் நிறுவனம் செயற்கைக் கால்களையும் அவற்றை பொருத்துவதற்குப் பயன்படும் சில உதிரிப்பொருள்களையும் கொழும்பில் இருந்து பெற்றுத் தரும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரியதையடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இங்கு செயற்கைக் காலுக்கு பெரும் பற்றாக்குறை இருந்து வந்தது தெரிந்ததே. (க)

யாழ். வைத்தியசாலைக்கு

# 3மாதத்திற்கு 5250லீற்றர் டீசல்; சுகாதார அமைச்சு ஒப்புதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனைக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை 5250 லீற்றர் டீசல் அனுப்பி வைப்பதாக சுகாதார அமைச்சு ஒப்புக்கொண்டுள்ளது.

இந்தமாத நடுப்பகுதியில் வைத்திய அதிகாரிகள் அமைச்சுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பேசியபோதே இந்த முடிவு எடுக்கப்பட்டது. மேலும் இந்த வைத்தியசாலைக்கு மூன்று மாதங்களுக்குச் சாதாரண நிலைமைகளில் தேவைப்படும் அளவு மருந்துப் பொருள்களையும் அனுப்பிவைப்பதற்கும் அமைச்சு உறுதி அளித்துள்ளது. ஆனால் தற்போதய போர்க்காலச் சூழ்நிலையில் இந்த மருந்துப் பொருள்கள் போதுமானதாக இல்லை என்று வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம்

# அங்கவீனர்களுக்கு உதவும்படி மக்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் அங்கவீனர்களாகியவர்களின் வாழ்வுக்கு மனிதநேய உணர்வுடன் உதவுமாறு யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்தும் நிறுவனம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதற்காக பணஉதவிசெய்ய விரும்புபவர்கள் பண உதவி புரியலாம் என்றும் மேலும் உங்கள் வீடுகளில் பயன்படாமல் இருக்கும் ஊன்றுகோல்கள் போன்றவற்றை எம்மிடம் ஒப்படைத்தால் அவற்றை தாம் புனரமைப்புச் செய்து அங்கவீனர்களுக்கு வழங்கி அவர்களுக்கு உதவமுடியும் என்றும் இந்த நிறுவனம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (க)

### புலிகள் - இராணுவம்

யளவில் கிருஷ்ணர்கோயில்பகுதியில் முகாமிட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் கீரிமலைப்பகுதியை நோக்கி வெளியேறமுற்பட்டபோது இவர்கள் மீது விடுதலைப் புலிகள் கடுந்தாக்குதலை மேற்கொண்டனர். 30 நிமிடங்கள் வரை நடைபெற்ற உக்கிர மோதலை அடுத்து பலத்த இழப்புகளுடன் காயமடைந்த மூன்று இராணுவத்தினரைத் தூக்கிக் கொண்டு படையினர் தமது முகாம் திரும்பினார்.

இதனைத் தொடர்ந்து காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை இராணுவ முகாமிலிருந்து கீரிமலை, கருகம்பனை பகுதிகளை நோக்கித் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இத் தாக்குதலினால் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது (ச)

### யாழ்.

துள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களுக்கான வேதனத்திலிருந்து திரட்டப்பட்ட ஒவ்வொரு நாள் ஊதியத் தொகையான மொத்தம் ஒரு லட்சத்து இருபத்து நாலாயிரத்து தொளாயிரத்து அறுபத்து ஐந்து (124965) ரூபா தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைமையகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது யாழ். மாநகரசபை ஊழியர்களின் இம் முன்னோடி நடவடிக்கையின் மூலம் சுமார் இருபத்தைந்து குடும்பங்கள் உடனடியாகத் தொழில் வாய்ப்பைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இராணுவ நடவடிக்கைகளால் உழைப்பாளிகளை இழந்துள்ள குடும்பங்களிலிருந்தும், இராணுவ நடவடிக்கைகளால் உழைக்கும் திறனை இழந்துள்ள குடும்பத் தலைவர்களைக் கொண்ட குடும்பங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்கள் மேற்படி திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ளனர்.

### பளையில்

லிருந்து சாவகச்சேரிக்கு எடுத்து வரப்பட்டு பின் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மேலும் காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (85)

# கலை நிகழ்ச்சி

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று காலை 9 மணி முதல் பரத நாட்டியம், வில்லிசை, வயலின் கச்சேரி, வீணைஇசை நாடகம் உட்பட பல கலை நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. இந்த விழாவில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு இந் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்த யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர் வேண்டுகோள்விடுத்துள்ளனர்

### கட்டாக்காலி

களைக் கட்டுப்படுத்தவேண்டியுள்ளதால் நாய்வளர்க்கும் உரிமையாளர்கள் தங்கள்நாய்களை வீட்டில் கட்டி வளர்ப்பதுடன் வளர்ப்புநாய் என்பதற்கு அடையாளமாக கழுத்துப்பட்டியை நாய்க்கு அணிவித்தல் வேண்டும், கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் நடவடிக்கை எம்மால் 5.12.90 இல் இருந்து மேற்கொள்ளப்படும். அடையாளமற்ற நாய்களைப் பிடித்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதேச அல்லதுபிரிவுச்செயலகத்தில் ஒப்படைத்து ஒருநாய்க்கு ரூபா 5/- வீதம் பெற்றுக் கொள்ளலாம். தமிழீழமக்கள் அனைவரையும் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது

### யாழ். வைத்தியசாலை

கொண்டே தற்போது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேவேளை இராணுவ நடவடிக்கையினால் யாழ். ஆஸ்பத்திரிக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### இராணுவம்

இராணுவதரப்பில் உயிரிழந்தோரின் விபரம் தெரியவில்லை. புலிகள் தரப்பில் சிறி (முத்தையா மகேந்திரராஜா கருவில் புளியங்கூடல், ஊர்காவற்றுறை), வதனன் (கார்த்திகேசு பாலேந்திரன் கருங்காலிகாரைநகர்) உட்பட மூன்று போராளிகள்வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (மு)

### இடிபாட்டிற்குள்

இராணுவ முகாம் புலிகளால் தகர்க்கப்பட்டது தெரிந்ததே. இந்த முகாமின் இடிபாடுகளை அகற்றும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் கோட்டைக் கற்களை வாகனங்களில் ஏற்றிக் கொண்டிருக்கையில் இடிபாடுகளுக்கிடையில் இருந்து 2500 ரேட்டோரவைகள் பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டு புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# தஞ்சை அகதிமுகாம்களில் பொலிஸார் தேடுதல்

தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து போராளிகள் சிலர் ஊடுருவியிருப்பதாக கிடைத்த தகவல்களை அடுத்து கோவில்பட்டி, கயத்தாறு, பெருமான்புரம், நாராயண அம்மான்புரம் ஆகிய இடங்களிலுள்ள இலங்கை அகதிகள் முகாம்கள் சோதனை செய்யப்பட்டன. இச் சம்பவத்தையடுத்து தமிழகத்திலுள்ள அனைத்து அகதி முகாம்களிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்படுமென்று காவல் துறை உயரதிகாரி திரு. ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

# கோப்பாயில் குடும்பப் பெண் நச்சரவம் தீண்டி மரணம்

(கோப்பாய்)

கோப்பாயில் குடும்பப் பெண் ஒருவர் நச்சுப் பாம்பு தீண்டி பதினைந்து நிமிடத்தில் பலியாகியுள்ளார்.

நேற்று மாலை தனது தோட்டத்தில் மரக்கறிக் கன்றுகளை நாட்டிக் கொண்டிருந்த திருமதி லோகேஸ்வரன் (வயது 45) என்ற குடும்பப் பெண்மணிக்கு திடீரென அப்பகுதிக்குள் நுழைந்த நச்சுப் பாம்பு தீண்டியது. பாம்பு தீண்டியதும் அவர் அதிவேகமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அப்படியிருந்தும் அவரின் உயிர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே பிரிந்தது.

இவரது கணவர் ஏற்கனவே சிறிலங்கா இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். (க)

### களஞ்சியத்தில்

நிலை இருந்து வருகின்றது. இந்த நிலையில் புதியதொரு கட்டடம் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டு அங்கு பொருள்கள் இறக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் தெரியவருகிறது.

### அரசாங்கத்துடன்

கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டதும் போரில் வெற்றி எவ்வளவு தொலைவில் உள்ளது என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது என பாராளுமன்றத்தில் வாசித்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டார் எல்லாம் நல்லபடியாக நடக்கிறது. புலிகள் வீழ்ச்சி அடையும் நிலையில் இருக்கிறார்கள் என மக்கள் நம்ப வைக்கப்பட்டதாக அவர் சாடினார். அரசுக்கு சொந்தமான செய்தி நிறுவனங்கள் போலிப் பிரசாரம் செய்கிறது. அரசு நிலைமையைச் செயல்முறைக்கு ஒப்ப நோக்க வேண்டும்; இலங்கைப் படையினரின் வீரத்தையும், கடமை உணர்ச்சியையும் பாராட்டிய எதிர்க்கட்சித் தலைவி அரசிடம் இருந்து படையினருக்கு அவசியமான ஆதரவு கிடைக்கிறதா என வினவினார். மாங்குளத்தில் அகப்பட்டுக் கொண்ட இராணுவம் விமானப்படையின் உதவி கோரி பல அவசர வானொலிச் செய்திகளை அனுப்பிய வேளையில் இராணுவக் ஹெலிகொப்டர் சாதாரண ஆட்களைக் கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்டிருந்தன எனவும் குறிப்பிட்டார்.

வேறு தேவைகளுக்கு ஹெலிகொப்ரர்கள் பயன்படுத்தப்பட்டன என்ற சிறிமாவின் குற்றச்சாட்டு மாங்குளத்தில்சண்டை நிகழ்ந்து கொண்டிருந்தபோது பிரேமதாசாவின் வடபகுதி விஜயத்திற்குபலஹெலிகொப்ரர்கள் பயன்படுத்தப் பட்டதையே மறைமுகமாகக் குறிப்பிடுவதாக பரவலாக ஊகிக்கப்படுகின்றது.

இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா போர் என்று ஒன்று வந்துவிட்டால் வெற்றியும், தோல்வியும் சகஜம் என்றும், அதுவரை அனைவரையும் பொறுமை காக்கும் படியும், ஜே. வி பியினருக்கு நேர்ந்த கதிதான் விடுதலைப் புலிகளுக்கும் நேரும் என்றும் கூறினார்.

### பூநகரியில்

லப்பட்டுள்ளனர். ஏழு லொறிகளுடன் நான்குவீடுகளும், பல கடைகளும் பலத்த சேதத்திற்குள்ளாகின. இந்தத் தாக்குதலில் சிவலிங்கம்(40), தங்கராசா(34), மரியதாஸ் (57), நந்தகுமார் (52), நாகேந்திரம் (51) ஆகியோர் படுகாயம் அடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (85)

# மரண அறிவித்தல்

## திரு. ஆ. ச. ஆறுமுகம்
## Mr. A. S. ARUMUGAM

பரந்தன் ஆ. ச. சங்கரப்பிள்ளை சகோதர நிறுவனத்தின் பிரதம பங்காளரும், பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான தர்மகர்த்தாவுமாகிய திரு ஆ. ச. ஆறுமுகம் அவர்கள் 28-11-90 அன்று கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற சண்முகம் சேதுப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட அன்பு மகனும், காலஞ்சென்ற திருமதி அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முகாந்திரம் ஆ. ச. சங்கரப்பிள்ளை, காலஞ்சென்ற சமாதான நீதவான் ஆ. ச. கந்தையா ஆகியோரது அன்புச் சகோதரரும், இராசமலர் இராசலிங்கம், பாலாம்பிகை, பாலேந்திரன், இந்திராதேவி, வசந்திராதேவி, காலஞ்சென்ற இரஞ்சனாதேவி, தயாபரிதேவி ஆகியோரது அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற நடராசா (தமிழ் உலகம்) கணநாதா (சம்பியா), டாக்டர் ஆனைமுகன் (நியூசிலாந்து), சந்திரமதி, சாரதாமணி, தேசேந்திரன், கனேசலிங்கம் ஆகியோரது அன்பு மாமனாரும், பொன்மலர், சிவசங்கர், சிவகுமார், செந்தாமரை, அறிவழகன், காண்டீபன், அருள்மொழி, அருட்செல்வி, சசிவர்ணா, காயத்ரி, சஜூமுகவர்ணா, சண்முகவர்ணா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 02-12-90 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பில் நடைபெறும்; உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

(R/884)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.